# பல்லவபுரம் பெரு நகராட்சி

# 2019–2020 ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## தோற்றம்

பல்லவபுரம் பெரு நகராட்சி 17.01.1970–ம் நாளன்று கீழ்க்கண்ட பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை இணைத்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 55, நாள்: 12.01.1970–ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது.

1. ஜமீன் பல்லாவரம் பேரூராட்சி
2. இசா பல்லாவரம் பேரூராட்சி
3. அஸ்தினாபுரம் பேரூராட்சி
4. கீழ்க்கட்டளை ஊராட்சி
5. நெமிலிச்சேரி ஊராட்சி

இந்நகராட்சி 01.04.1975 முதல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண் 200, நாள்: 10.02.1975–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி 09.05.1983ம் தேதி முதல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 651, நாள்: 08.05.1983–ன்படி முதல் நிலைக்கு உயர்த்தப்பட்டது. அரசாணை எண் 85, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 22.05.1998–ன்படி முதல் நிலையில் இருந்து 22.05.1998 முதல் தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்டது. அரசாணை (நிலை) எண் 238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 02.12.2008–ன்படி தேர்வு நிலையில் இருந்து 02.12.2008 முதல் சிறப்பு நிலையாக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஆட்சி எல்லை

இந்நகராட்சி பரப்பளவு சுமார் 18.00 சதுர கிலோ மீட்டராகும். நடப்பு ஆண்டில் நகராட்சியின் பரப்பளவு கூடுதலோ, குறையவோ ஏதுமில்லை.

2011–ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கட் தொகை 2,15,452 இதில் ஆண்கள் 1,07,953, பெண்கள் 1,07,498 மற்றவர் 1 ஆகும். மக்கள் தொகையில் படித்தவர்கள் 181929 இதில் ஆண்கள்–93707, பெண்கள்–88221 மற்றவர்–1 ஆகும். 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 1,44,623 இதில் ஆண்கள் 73,365, பெண்கள் 71,258 ஆகும்.

## நகர் மன்றம்

1991–ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அரசாணை எண் 135, நாள்: 11.06.1996–ன்படி உறுப்பினர்களின் எண்ணிக்கை 32ல் இருந்து 42 ஆக உயர்த்தப்பட்டது. அதன்படி 42 வார்டுகளாக பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011ம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டது. 2011ம் ஆண்டு நடத்தப்பட்ட 42 வார்டுகளில் நிர்ணயம் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் விவரப்படி தேர்தல்கள் நடத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை 137, தேர்தல்கள் நாள்: 12.09.2011–ன்படி வெளியிடப்பட்ட அறிவிக்கையின் அடிப்படையில் வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வார்டுகளின் எண்ணிக்கை | – | 42 |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ்மக்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | | |
| பொது | – | 4 (6, 11, 16, 18) |
| பெண்கள் | – | 2 (7,9) |
| பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் | – | 12 (1, 3, 5, 8, 10, 12, 17, 24, 31, 33, 36 மற்றும் 42) |
| பொது வார்டுகள் | – | 24 (2, 4, 13, 14, 15, 20, 19, 21, 22, 23, 25, 26, 27, 28, 29, 30, 32, 34, 35, 37, 38, 39, 40 மற்றும் 41) |

## தேர்தல் நன்நடத்தை விதி

அரசாணை (பல்வகை) எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.10.2016–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளவாறு, 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவு 375–B–ன்கீழ் திரு. ம.செந்தில் முருகன் அவர்கள் 01.04.2019 முதல் 31.03.2020 வரை தனி அலுவலராக பணியாற்றிவருகிறார்.

**அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்தனர்.**

| வ. எண் | அலுவலர் பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1 | ஆணையாளர் | திரு. ம. செந்தில் முருகன், எம்.காம்.,<br>ஆணையர்<br>01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2 | நகராட்சி பொறியாளர் | 1. திரு. கே. கருப்பையா ராஜா<br>நகராட்சி பொறியாளர்<br>01.04.2019 முதல் 20.06.2019 வரை<br>2. திரு. பி.வி. பன்னீர்செல்வம்<br>நகராட்சி பொறியாளர்<br>21.06.2019 முதல் நாளது வரை |
| 3 | நகரமைப்பு அலுவலர் | 1. திரு. ஜி. சிவகுமார்<br>முதுநிலை நகரமைப்பு அலுவலர்<br>01.04.2019 முதல் 19.09.2019 வரை<br>2. திரு.எஸ்.வி.மாறன்<br>முதுநிலை நகரமைப்பு அலுவலர்<br>20.09.2019 முதல் நாளது வரை |
| 4 | துப்புரவு அலுவலர் | 1. திரு. பி.செல்வராஜ்<br>துப்புரவு அலுவலர்<br>01.04.2019 முதல் 18.11.2010 வரை<br>2. திரு. ஆர்.கே.கோவிந்தராஜூ<br>துப்புரவு அலுவலர்<br>19.11.2019 முதல் நாளது வரை |
| 5 | மேலாளர் | திருமதி. வி. விஜயலட்சுமி,<br>மேலாளர்<br>01.04.2019 முதல் நாளது வரை |
| 6 | வருவாய் அலுவலர் | திரு. வை. குமார்<br>வருவாய் அலுவலர்<br>01.04.2019 முதல் நாளது வரை |

## இடவசதி

அலுவலகம் சொந்தக் கட்டிடத்தில் பணியாளர்கள் போதுமான இடவசதியுடன் இயங்கி வருகிறது.

## பணியாளர்கள் (பொதுப்பிரிவு)

அறிக்கையாண்டில் மேலாளர், மேற்பார்வையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றினர்

| | | |
|---|---|---|
| 1. | மேலாளர் | 1 |
| 2. | கணக்கர் | 1 |
| 3. | உதவியாளர்கள் | 3 |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 11 |
| 5. | தட்டச்சர் | 1 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 |
| 7. | அலுவலக உதவியாளர்கள் | 7 |
| 8. | இரவுக் காவலர் | 1 |
| 9. | கணினி உதவி திட்டமிடுபவர் | 1 |
| 10. | புள்ளி விவரக் குறிப்பாளர் | 1 |

## வருவாய் பிரிவு

அறிக்கையாண்டில் வருவாய் அலுவலர் தலைமையில் 2 வருவாய் ஆய்வர்களும், 9 வருவாய் உதவியாளர்களும் பணியாற்றினர்.

## நகரமைப்பு பிரிவு

இந்நகராட்சியில் முதுநிலை நகரமைப்பு அலுவலர் மேற்பார்வையில் 2 நகரமைப்பு ஆய்வாளர்களும், ஒரு உதவி பட வரைவாளரும் பணியாற்றி வருகின்றனர்.

## பொது சுகாதார பிரிவு

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன்படி இறுதியாக்கம் செய்வதற்கான நவீன யுத்திகளை கையாண்டு ‘‘பல்லவபுரம் குப்பையில்லா நகராமாக’’ செயல்படுத்த தேவையான கொள்கைகள் மற்றும் செயல் திட்டம் வகுக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளை பின்பற்றி தினசரி சேகரமாகும் குப்பைகளில், மக்கும் தன்மையுள்ள ஈரக்கழிவுகளை பசுமை உரக்குடில்களில் இயற்கை உரமாக மாற்றும் பணிக்கும், மக்காத தன்மையுள்ள உலர் கழிவுகளை சேகரித்து விற்பனைக்கு உகந்தவைகளை பிரதி வாரம் புதன்கிழமை தோறும் விற்பனை செய்து, துப்புரவு பணியாளர்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டும், மீதமுள்ள எரியும் தன்மையுள்ள உலர் கழிவுகளை சிமெண்ட் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டும் வருகிறது.

**(அ) ஈரக்கழிவுகள் செயலாக்கும் திட்டம்.**

இந் நகராட்சியில் 7 சுகாதார பிரிவுகளில் சேகரமாகும் ஈரக்கழிவுகளை 7 இடங்களில் 5.00 மெ.டன் கொள்ளளவு கொண்ட பசுமை உரக்குடில்களும், சிறிய அளவிலான நுண் உரக்குடில்கள் 23 இடங்களிலும் அமைக்கப்பட்டு, உரமாக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு தினசரி சராசரி 40 மெ.டன் அளவிலான கழிவுகள் உரமாற்றம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

இப்பணியில் தயாரிக்கப்பட்ட இயற்கை உரத்தை விவசாய நிலங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, இதில் ஈட்டும் தொகையை துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**(ஆ) உலர்கழிவுகள் செயலாக்கும் திட்டம்.**

தினசரி சேகரமாகும் உலர் கழிவுகளில், விற்பனைக்கு உகந்த கழிவுகளை சேகரம் செய்து, பிரதிவாரம் புதன்கிழமை தோறும், தனியார் நிறுவனங்களில் விற்பனை செய்வதன் மூலம், துப்புரவு பணியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

விற்பனைக்கு எடுத்துக்கொள்ளும் கழிவுகள் போக, மீதமுள்ள எரியும் தன்மையுள்ள கழிவுகளை சிமெண்ட் தயாரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**(இ) பொது சுகாதாரப் பணிக்கான வாகனங்கள்.**

இந் நகராட்சி பகுதியில் உள்ள 74211 குடியிருப்புகளில், திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் முதல்நிலை சேகரிப்பு பணிக்கு LCV (Light Commercial Vehicle) வாகனங்கள் 30 எண்ணிக்கையும், BOV (Battery Operated Vehicle) வாகனங்கள் 45 எண்ணிக்கையும் பயன்பாட்டில் உள்ளது. இரண்டாம் நிலை சேகரிப்பு பணிக்கு, 4 காம்பாக்டர் வாகனங்களும், 4 டிப்பர் லாரிகளும் இருந்து வருகிறது. வர்த்தகப் பகுதி, பிரதான சாலைகள் ஆகிய பகுதிகளில் 109 இடங்களில் வைக்கப்பட்டுள்ள காம்பாக்டர் கொள்கலன்களில் சேகரமாகும் குப்பைகளை மேற்படி 4 காம்பாக்டர் வாகனம் மூலம் அகற்றும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

## பணியாளர் விவரம்—

2019—2020ம் அறிக்கையாண்டில் துப்புரவு அலுவலர் தலைமையில் 7 துப்புரவு ஆய்வர்கள் மற்றும் 13 துப்புரவு மேற்பார்வையாளர்கள் பணியாற்றினர்.

1998–ம் ஆண்டு பணியாளர்களின் அளவுகோலின்படி 324 பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டது. தற்சமயம் வயது முதிர்வின் காரணமாகவும், இறப்பின் காரணமாகவும் 38 பணியிடங்கள் காலியாகி 286 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்கத்தின்படி பணி செய்ய தற்போதுள்ள பணியாளர்களுடன் கூடுதலாக, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண். 101, நாள். 30.04.1997ன்படி 232 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள அரசு ஒப்புதல் பெறப்பட்டு, பணியாளர்கள் ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்பட்டு சுகாதார பணிகள் தொய்வின்றி சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு எரிபொருள் தேவை ஆண்டுக்கு ரூ.54.50 இலட்சம் செலவிடப்படுகிறது.

பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்ட அனைத்து வாகனங்களுக்கு வாகன பழுது தகுதிகள் பெற செலவின தொகை ரூ.45.00 இலட்சம் செலவிடப்படுகிறது.

இந் நகர எல்லைக்குள் மழைநீர் கால்வாய் மற்றும் கழிவுநீர் கால்வாய் 165 கி.மீ. நீளம் உள்ளது. இந்த கால்வாயினை சுத்தம் செய்யும் பணியினை பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்படுகிறது.

## டெங்கு தடுப்பு நடவடிக்கை–

இந்த நகராட்சியில் கொசு ஒழிப்பு மற்றும் யானைக்கால் தடுப்புத் திட்டத்தின்கீழ் 2 களப்பணி உதவியாளர்கள் மற்றும் 6 பணியாளர்கள் பணியாற்றிவருகின்றனர். இப்பணியாளர்களை கொண்டு கொசு புழு ஒழிப்பு மற்றும் புகை இயந்திரம் மூலம் முதிர்ந்த கொசுக்கள் அழிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந் நகராட்சியில் டெங்கு தடுப்பு பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் 247 DBC பணியாளர்கள் அமர்த்தப்பட்டு தினசரி 50 வீடுகள் வீதம் வாரம் 300 வீடுகளை சுழற்சி முறையில் ஆய்வு செய்து, கொசுப்புழு அழித்தல், கொசு உற்பத்திக்கான ஆதாரங்களை அழித்தல் மற்றும் பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை –

2019–2020ம் அறிக்கையாண்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவ காரணமாக இருந்த சூழ்நிலையில் தடுப்பு நடவடிக்கையாக பொது மக்களை பாதுகாக்கும் வகையில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு பொது சுகாதாரம் பேனப்பட்டு வந்தது. **DBC** பணியாளர்கள் மூலம் விழிப்புணர்வு நோட்டீஸ்கள் வீடுவீடாக சார்வு செய்யப்பட்டது. நோய் தொற்றிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் விளக்கப்பட்டது. நகராட்சிக்குட்பட்ட பகுதி முழுவதும் நோய் தடுப்பு நடவடிக்கை பேனர்கள் மற்றும் அறிவிப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அறிக்கையாண்டில் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று எவருக்கும் பரவவில்லை.

## பொறியியல் பிரிவு

இந்நகராட்சி பொறியியல் பிரிவானது நகராட்சி பொறியாளர் தலைமையின் கீழ் கீழ்க்கண்ட பணியாளர்களை கொண்டதாக இருந்தது.

| | | |
|---|---|---|
| 1. | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2. | உதவிப் பொறியாளர்கள் | 2 |
| 3. | பணி ஆய்வாளர் | 1 |
| 4. | மின் பணியாளர் | 1 |
| 5. | மின் கம்பியாளர் | 3 |
| 6. | மின் கம்பி உதவியாளர் | 4 |
| 7. | ஓட்டுநர்கள் | 6 |
| 8. | மீட்டர் ரீடர் | 2 |
| 9. | பொருத்துநர் | 1 |
| 10. | வால்வு திறப்பாளர் | 2 |
| 11. | காவலர் | 3 |

## சாலைகள்

இந்நகரின் வழியாக செல்லும் கிராண்ட் சதர்ன் டிரங்க் ரோடு தேசிய நெடுஞ்சாலை துறையினராலும், தர்கா ரோடு மற்றும் மேடவாக்கம் மெயின் ரோடு, இராஜேந்திர பிரசாத் ரோடு போன்றவை மாநில நெடுஞ்சாலைத் துறையினராலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி எல்லைக்குள் நகராட்சியால் 31.03.2019 அன்று பராமரிக்கப்பட்டு வரும் சாலைகள் விவரம்.

| | |
|---|---|
| சிமெண்ட் கான்கிரிட் சாலை | 58.82 கி.மீ |
| தார் சாலைகள் | 177.14 கி.மீ |
| பேவர் பிளாக் சாலைகள் | 16.04 கி.மீ |
| **மொத்தம்** | **252.00 கி.மீ** |

## தெருவிளக்குகள்

நகராட்சியால் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**Street Light Details**

| Sl. No. | Light Details | | Nos. |
|---|---|---|---|
| 1. | 40W | Tube Light | 4965 |
| 2. | 70W | SV Lamp | 817 |
| 3. | 150W | SV Lamp | 306 |
| 4. | 250W | SV Lamp | 1356 |
| 5. | 2 x 36W | T5 Lamp | 504 |
| 6. | 4 x 24W | T5 Lamp | 479 |
| 7. | 36 x 45W | CFL Lamp | 798 |
| 8. | 40W | M.H. Lamp | 192 |
| 9. | 250W | M.H. Lamp | 543 |
| 10. | 150W | M.H. Lamp | 42 |
| | | **Total** | **10002** |

தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் முழுவதும் தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பராமரிப்பு பணியினை M/s.ஆகாஷ் இஞ்ஜினியரிங் என்ற தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இவர்களுக்கு தோராயமாக வருடத்திற்கு ரூ.**136.08** லட்சம் வரை செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைத்தல் மற்றும் பராமரிப்பு குறித்த விவரம்

இந்நகராட்சி **42** வார்டுகளில் **54** எண்ணம் பூங்கா உள்ளது. இவற்றில் AMRUT **2015-16**ம் ஆண்டு திட்டத்தில் ரூ.**202.00** இலட்சத்தில் **3** பூங்காவும், **2016-17**ம் ஆண்டு ரூ.**264.00** இலட்சம் **6** பூங்காவும் மற்றும் OSR நிதியின் மூலம் **32** பூங்காக்கள் முடிக்கப்பட்டு தனியார் மூலம் நல்ல நிலையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**2017–2020**ம் ஆண்டு ரூ.**331.962** இலட்சம் மதிப்பீட்டில் **7** பூங்காக்கள் முழுவதும் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பெற உள்ளது.

## பாதாள சாக்கடை கழிவு நீர்திட்டம் விரிவாக்கம் செய்து முழுமைபடுத்துதல்

பல்லவபுரம் நகராட்சியில் அரசாணை எண்.G.o.(ms)/MAWS, நாள் 27.06.2002–ன் படி 2002 ஆம் ஆண்டு பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.36.73 கோடிக்கு அனுமதி வழுங்கப்பட்டது. இத்திட்டம் TNUDP-III நிதி திட்டத்தின் கீழ் CMWSSB மூலம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 2011–ல் அரசாணை G.O.(Ms)எண்.559/MAWS, நாள் 31.12.2009–ன் படி திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.75.33 கோடியில் முடிக்கப்பட்டது.

இத்திட்டம் பல்லவபுரம் நகராட்சியின் பரப்பளவு 18.00 சதுர கிலோ மீட்டருக்கு 2001 மக்கள் தொகை கணக்கின்படி 1,43,984–க்கும் 2035 ஆம் வருடம் உத்தேதிக்கப்பட்ட மக்கள் தொகைக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**<u>இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | கழிவுநீர் குழாயின் நீளம் | : | 258.30 கி. மீ. |
| 2. | ஆள்நுழைவாயில்களின் மொத்த எண்ணிக்கை | : | 7706 |
| 3. | பிரதான குழாயின் நீளம் | : | 16.24 கி. மீ. |
| 4. | வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை | : | 32,523 |
| 5. | கழிவு நீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | : | 17 எண்கள் |

பல்லவபுரம் நகராட்சியின் மொத்த சாலை நீளம் 252.00 கிலோ மீட்டரில் 159.74 கி. மீ. நீளத்திற்கு மட்டும்தான் பாதாள சாக்கடைத் திட்டத்தில் வகை செய்யப்பட்டும் 38.24 கிலோ மீட்டருக்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளமைக்கு மொத்தம் 198.00 கிலோ மீட்டர் பாதாள சாக்கடை திட்டம் மக்கள் பயன்பாட்டில் இயஙகிவருகிறது.

மேலும் துரித நகரமயமாக்களின் காரணமாக பல்லவபுரம் நகராட்சியின் மொத்த மக்கள் தொகை எதிர்பாராத வகையில் 2011ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 2,15,452 ஆக அதிகரித்துள்ளது. முதல் வடிவமைப்பில் திட்டமிடப்பட்ட 25,000 வரி விதிப்புகள் 55,000 ஆக அதிகரிப்பிற்கேற்ப சாலைகளின் நீளமும் 180 கி. மீட்டரிலிருந்து 252.00 கி.மீ ஆக அதிகரித்துள்ளது. விடுப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பட்டு பணிகள் விடுப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை பணி அமைத்திட 2015–16 ஆம் ஆண்டு AMRUT திட்டத்தில் ரூ.24.06 கோடிக்கு திட்டம் அமைக்கப்பட்டு அரசு ஆணை எண்.26 (MA&WS) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.03.2017ன்படி

மேற்படி திட்டத்தை விரைந்து செயல்படுத்தி முடிப்பதற்காக கீழ்க்கண்டவாறு சிப்பங்களாக பிரித்து ஒரே சமயத்தில் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

| **சிப்பம் எண்** | **மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|
| சிப்பம் – 1 | 52.84 |
| சிப்பம் – 2 | 456.62 |
| சிப்பம் – 3 | 404.12 |
| சிப்பம் – 4 | 484.43 |
| சிப்பம் – 5 | 415.34 |
| சிப்பம் – 6 | 27.53 |
| சிப்பம் – 7 | 13.33 |
| சிப்பம் –8 | 89.51 |
| சிப்பம் – 9 | 67.62 |
| Road Restoration charges | 394.80 |
| **மொத்தம்** | **2406.14** |

விடுபட்ட தெருக்கள் மற்றும் கூடுதல் பகுதிகளுக்கு பாதாள கழிவுநீர் வைப்புத்தொகை நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நகரமன்ற தீர்மானம் எண் 975, நாள் 29.10.2014 அளிக்கப்பட்டுள்ளது. TWIC நிறுவனம் மூலம் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.24.06 கோடி மதிப்பீட்டில் 9 சிப்பங்களாகவும் மற்றும் சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்டது, அதன்பேரில் அரசு ஆணை எண்.26, நாள்.20.03.2017ல் மேற்படி பாதாள சாக்கடை திட்டத்திற்காக வைப்பு தொகையிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்நகரமன்ற தீர்மானம் எண் 184, நாள் 03.04.2017ன் படி **AMRUT** திட்டத்தில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் முழு அளவில் முடிக்கப்பட்டு, தமிழகத்தில் பாதாளச்சாக்கடைத் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்ட நகராட்சி பல்லவபுரம் நகராட்சியாகும்.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம்

2016–17ம் ஆண்டு நிதி ரூ.62.70 இலட்சத்திற்கு 18 குடிநீர் பணிகளும் 2017–18ம் ஆண்டு நிதி ரூ.105.00 இலட்சம். 25 குடிநீர் பணிகளும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 ரூ. 82.47 இலட்சம் குடிநீர் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 2019–20 நிதியாண்டில் ரூ. 54.80 இலட்சத்திற்கு குடிநீர் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

### பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம்

2016–17ம் ஆண்டு நிதியில் சாலை பணிகள் ரூ.78,50 இலட்சத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டன. 2017–18 ஆம் ஆண்டு நிதியின் கீழ் ரூ.66.40 இலட்சத்திற்கு பணிகள் மற்றும் 2018–19 ஆம் ஆண்டில் ரூ.16.00 இலட்சத்தில் உயர்மின் கோபுர விளக்கு 07.01.2020ல் நிர்வாக அனுமதி பெற்று பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

### தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2019-20) நிதியாண்டு மற்றும் 14வது மத்திய நிதிக்குழு திட்டதின் கீழ்

2019–20 நிதியாண்டில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17340/2019/இ3 நாள்.16.10.2019ன்படி ரூ. 2,500.00 இலட்சம் மதிப்பீட்டில் 13 சிப்பங்கள் மொத்தம் 42.66 கி.மீ. நீளம் சாலை அமைக்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு தற்போது அனைத்து பணிகளும் நிறைவடையும் தருணத்தில் உள்ளது.

மேலும், 14வது மத்திய நிதி குழு திட்டம் 2019–20 நிதியாண்டு பொது நிதியில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி நாள். 07.01.2020ல் பெறப்பட்டு சாலைகள் அமைக்க மொத்தம் ரூ.9.19 இலட்சத்தில் 14 பணிகளை ரூ. 6.25 இலட்சம் மதிப்பிட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது அனைத்து பணிகளும் நிறைவு பெறும் நிலையில் உள்ளது.

### பள்ளி கட்டிடங்கள் (திட்டம் மற்றும் பராமரிப்பு)

பல்லவபுரம் பெரு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் 4 துவக்கப்பள்ளிகளும், 4 உயர்நிலைப்பள்ளிகளும், 8 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 115.50 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. மேலும், 200.00 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டு வரும் கல்வியாண்டில் நகராட்சி பள்ளிகள் அனைத்திலும், ஆய்வகங்கள் நிறுவப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ/மாணவியர்களுக்கு கழிவறைகள் அமைக்கப்பட்டு நகராட்சியால் நன்கு பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### ரயில்வே கேட் சுரங்கப்பாலம் அமைப்பது திட்டம்

ராதா நகர் சுரங்கப்பாதை LC27, LUS அமைக்கும் பொழுது 1/25 அளவில் சாய்வு இருக்க வேண்டும். அதன்படி ராதா நகர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை சாலையில் 90 மீட்டர் அளவில் நீளம் இருக்க வேண்டும். ஆனால் இருபுறமும் 20 மீட்டர் அளவிலே உள்ளது.

மேலும், ராதா நகர் பகுதியில் குடியிருப்போர் மற்றும் கடை உரிமைதாரர்கள் 26 நபர்கள் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிப்படைவதாக கூறி உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடை வழங்கப்பட்டது. தற்போது தடை நீக்கம் செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டு ரயில்வே மற்றும் நெடுஞ்சாலை துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வைஷ்ணவா கல்லூரி அருகில் LUS (Limited Use Subway) (L26) அமைக்க நெடுஞ்சாலைத்துறை (Metro Wing) மூலம் தென்னக ரயில்வே துறைக்கும் பிரேரணை அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. என்ற விவரம் நெடுஞ்சாலைதுறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அஸ்தினாபுரம் பேருந்து நிலையம் விவரம் (TPO Section)

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குள் அஸ்தினாபுரம் கிராமத்தில் 1973ம் ஆண்டு முதல் மாநகர போக்குவரத்துக் கழகம் பேருந்து நிலையம் இதுநாள்வரை இயங்கி வருகிறது.இவ்விடம் தனி நபருக்கு சொந்தம் என்பதால் நகராட்சி மூலம் தீர்மானம் 1170 நாள்.07.06.2004 பொது மக்களின் நலன் கருதி இவ்விடத்தினை நில ஆர்ஜிதம் செய்ய மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டது. ஆனால், வார்டு–எப், பிளாக்–57, நில அளவை எண்.34, பழைய சர்வே எண். 48/1A1A பகுதி, பரப்பு 1200 ச.மீ. (அ) 12912 ச.அடி இடமாகும். இவ்விடத்தினை நகராட்சி மூலம் நில எடுப்பு செய்வதற்கும் அரசாணை நிலை எண்.12, நகராட்சி நிர்வாகம் மற்றும் வருவாய் துறை நாள்.09.02.2009ல் ஒப்புதல் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் நில எடுப்பு தொடர்பாக அரசுக்கு பிரேணை அனுப்பி அரசாணை எண்.13, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.02.2005 நில ஆர்ஜிதம் வரைவு (Draft) அறிவிக்கை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் திருமதி.ஜெபபாக்கியம் என்பவர் W.P.No.8937/2008-ல் பேருந்து நிலையம் இடம் தனக்கு சொந்தம் என சென்னை உயர்நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியதில் சென்னை உயர்நீதிமன்றம் மேற்படி வழக்கில் தனியார் இடத்தினை பேருந்து நிலையம் பல்லவபுரம் நகராட்சி பயன்படுத்தி வந்தமைக்கு Exgratia-வாக ரூ.3.00 இலட்சம் வழங்க வேண்டும் என நீதியரசர் 11.08.2009–ல் இடைக்கால தீர்ப்பு வழங்கினார். அதன்பேரில் நகராட்சியும் தனியார் இடமாக இருப்பதால் அரசு வழக்கறிஞர் சட்டக்கருத்தினை ஏற்று ரூ.3.00 இலட்சம் காசோலை எண்.601449 நாள். 28.08.2009 வழங்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் திருமதி.ஜெபபாக்கியம் என்பவர் சமர்ப்பித்த வாதுரையின் பேரில் நகராட்சி சார்பாக அ–பதிவேட்டில் உள்ளவர்களின் விவரங்களுடன்

திருமதி.ஜெபபாக்கியம் எவ்வாறு உரிமம் கோருகிறார் என்கிற வினாவுடன் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழக்கு தொடர்ந்துள்ள திருமதி.ஜெபபாக்கியம் என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட பத்திரம் எண். **3776/2003** நாள்.**03.10.2003**ன் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் சர்வே எண்.**31/1** என குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் இடத்தின் எல்லைகள் மாறுதலாகி உள்ளது. எனவே, வழக்கு தொடர்ந்துள்ளவரின் பத்திரத்தின்படி சர்வே எண் வேறுபட்டுள்ளது. ஆகையால் வாதியின் பத்திரத்தின்படியும், புல தணிக்கையின்படியும் பேருந்து நிலையம் உள்ள இடத்தின் சர்வே எண்கள் மாறுபட்டுள்ளதை நீதி மன்றத்திற்கு தெரிவிக்குமாறும், மேலும் நீதி மன்ற உத்திரவின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளதையும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வழக்கு **11.07.2016**ல் விசாரணைக்கு வரப்பெற்று தற்போது வழக்கு விசாரணை தேதி குறிப்பிடாமல் நிலுவையில் உள்ளது.

மேலும் இவ்வழக்கு குறித்து அரசு போக்குவரத்து கழகம் மூலம் வழக்கை முடிக்கக் கோரி கடிதம் வந்தவண்ணம் உள்ளன. எனவே, பொது மக்கள் நலன் கருதி இவ்வழக்கினை W.P.No.8937/2008 அரசு வழக்கறிஞரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளதால், முன்னாள் வழக்கறிஞர் திரு.ராஜா கலிபுல்லா, பி.எஸ்.ஸி., பி.எல்., அவர்களிடமிருந்து Change of Vakalat பெறப்பட்டு நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் அவர்களிடம் **06.01.2018**ல் ஒப்படைக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

## கடல்நீரைக்குடிநீர் ஆக்கும் திட்டம்

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது மக்களுக்கு கடல் நீரை குடிநீராக மாற்றி விநியோகம் செய்திட JICA திட்டத்தின் கீழ் ரூ.**437.30** கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையில் உள்ளது. இத்திட்டம் நிறைவடைந்ததும் பல்லவபுரம் நகராட்சியில் நாள் ஒன்றுக்கு **38** MLD அளவில் குடிநீர் வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கும் பட்சத்தில் தினசரி நபர் ஒருவருக்கு **135** LPCD அளவில் வழங்க இயலும்.

## பல்லாவரம் பெரிய ஏரியில் தேக்கி வைக்கப்பட்டுள்ள குப்பைகளை அகற்றுவது தொடர்பான அறிக்கை

பல்லவபுரம் நகராட்சிக்கு தனிப்பட்ட முறையில் உரக்கிடங்கு இல்லாத சூழ்நிலையில் நகராட்சியின் மூலம் சேகரிக்கும் குப்பைகளை பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பல்லாவரம் பெரிய ஏரியின் (கணபதிபுரம்) ஒரு பகுதியில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கொட்டப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் குப்பைகளை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கையாளுவதற்கு ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் நகராட்சிகளுக்கென ரூ.99.00 கோடியில் வேங்கடமங்கலம் கிராமத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புரனமைப்பு (JnNURM) திட்டத்தில் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளுக்கு மேல் நகராட்சியில் பெறப்படும் குப்பைகள் பெரிய ஏரியில் கொட்டப்படாமல் வேங்கடமங்கலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெரிய ஏரியின் ஒரு பகுதியில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்தக்கோரி தென்மண்டல பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. ஏற்கனவே ஏரியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை விஞ்ஞான முறையில் மூடுவதற்கு (Scientific Closure) வேங்கடமங்கலம் திட்டத்தில் மதிப்பீடு ரூ.3.41 கோடிக்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. மேற்படி தீர்ப்பாயத்தில் வேங்கடமங்கலம் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட விஞ்ஞான முறைப்படி மூடுவதற்கு (Scientific Closure) பதிலாக புதிய திட்டமாக 5 ஏக்கர் அளவிலுள்ள குப்பைகளை உயிரியல் அகலாய்வு முறையில் (Biomining) ஏரியிலிருந்து முழுவதும் அகற்றி மழைநீரை தேக்கிடும் வகையில் அமைத்திடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

சராசரியாக ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் (ரூ.1,25,000/–) கன மீட்டர் அளவில் தேக்கி வைக்கப்பட்டுள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேக்கி வைக்கப்பட்டுள்ள குப்பைகளை உயிரியல் அகழாய்வு (Biomining) முறையில் அப்புறப்படுத்துவதற்கு ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (Swatch Bharat Mission) நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி அரசாணை எண். 21(MA(iv)) நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.14.03.2018ன்படி M/s. Zigma Globle Envron Soliction என்ற நிறுவனம் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டது.

தற்போது 21000 கன மீட்டர் குப்பைகள் உயிரியல் அகழாய்வு செய்யப்பட்டு அதற்கான தொகை ரூ. 1,41,00,000/–ஐ வழங்கப்பட்டுள்ளது.

## ஏரிகளை புனரமைத்தல் 2019-20

<u>பல்லாவரம் பெரிய ஏரி, கீழ்கட்டளை ஏரி, புனரமைப்பு திட்டம்</u>

பல்லவபுரம் நகராட்சிப் பகுதியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பெரிய ஏரி மற்றும் கீழ்கட்டளை ஏரிகள் உள்ளன. இரண்டு ஏரிகளையும் மேம்படுத்த, அரசாணை எண்.1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.01.2015ல் ரூ.22.02 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | விவரம் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்புர வளர்ச்சி திட்டத்தின் மூலம் உலக வங்கி கடன் | 13.21 |
| 2 | உலக வங்கி கீழ் மூலதன மான்யம் TNSUDP உதவி | 6.61 |
| 3 | நகராட்சி பங்களிப்பு தொகை | 2.20 |
| | **மொத்த திட்ட மதிப்பீடு** | **22.02** |

இத்திட்டப் பணிகளை தமிழ்நாடு நீட்டித்த நிலைத்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP) 60 சதவீத கடனாகவும் 30 சதவீத மானியமாகவும், 10 சதவீத உள்ளாட்சியின் பங்காக செயல்படுத்த, நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்டது. ஆனால், தென்மண்டல பசுமை தீர்பாயத்தின் உத்திரவின்படி, மேற்படி நீர்நிலை பகுதிகளில் எவ்வித கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ள கூடாதென உத்திரவிட்டதன் அடிப்படையில், மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. பெரிய ஏரியில் கழிவுநீர் கலக்காதவாறு தடுக்கும் வண்ணம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டிலும், பெரிய ஏரி தூர்வாரி பலப்படுத்தும் வகையில் ரூ.8.20 கோடியும், கீழ்கட்டளை ஏரி ரூ.3.98 கோடி மதிப்பீட்டிலும் ஆகமொத்தம் ரூ.14.98 கோடியில் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பொதுப்பணி (ட்டி.2) துறை அரசாணை (2டி) எண்.64, நாள்.06.09.2017ன்படி அனுமதி அளிக்கப்பட்டு ஏரியை சுத்தம் செய்தல், மதகு, நடைபாதை, மற்றும் கால்வாய் அமைத்தல், கரை வலுப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 05.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 23.03.2018 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணி ஒப்பந்த நாட்களிலிருந்து 18 மாதங்களுக்குள் பணி முடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது கீழ்க்கட்டளை ஏரி 95 சதவீதம் பணிகளும், பெரிய ஏரி 95 சதவீதம் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி வரும் செப்டம்பர் 2020ல் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பாதாள சாக்கடை திட்டம்

இந்நகராட்சிக்குட்பட்ட பாதாளச்சாக்கடை பராமரிப்பு பணிகள் தனியார் நிறுவன மூலம் ஒப்பந்தம் விடுப்பட்டு பாதாள சாக்கடை பணிகள் பராமரிக்க பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்காக ஆண்டிற்கு ரூ. 1.20 கோடி செலவிடப்படுகிறது.

## செயல்படும் பாதாள சாக்கடைத் திட்டம்

இந்நகராட்சியில் பாதாளச் சாக்கடை திட்டம் முதற்கட்டமாக 42 வார்டுகளில் செயல்படுத்த அரசு ஆணை எண் 234 **MAWS** நாள் 27.06.2002ல் **ரூ.36.73** கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பிறப்பிக்கப்பட்டது. இப்பணி சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் மூலம் திருத்திய மதிப்பீடு **ரூ.75.33** கோடியில் தயார் செய்யப்பட்டு அரசு ஆணை எண் 559 **MAWS** நாள்31.12.2009ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்படி பாதாளச் சாக்கடை திட்டம் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முடிக்கப்பட்டு 2012 டிசம்பர் முதல் மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

| பாதாள கழிவுநீர் வைப்புத் தொகை விபரம் | | | |
|---|---|---|---|
| அ. வீட்டிற்கு | ரூ. 10000 | வரி மாதத்திற்கு | ரூ. 150 |
| ஆ. வணிகம் | ரூ. 20000 | வரி மாதத்திற்கு | ரூ. 450 |
| இ. தொழிற்சாலை | ரூ. 20000 | வரி மாதத்திற்கு | ரூ. 750 |

## விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் குறித்த விவரம்

பாதாள சாக்கடை கழிவுநீர் திட்டமானது 2012ம் ஆண்டு முதல் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்படி நகராட்சியில் உள்ள 42 வார்டுகளில், 24 வார்டுகள் முழுமையாகவும், 18 வார்டுகளில் பகுதியாகவும் கழிவுநீர் திட்டமானது 198.00 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மீதமுள்ள விடுபட்ட பகுதிகளில் 42.00 கி.மீ. நீளத்திற்கு அரசாணை (நிலை) எண்.26 (MA&WS), நாள்.20.03.2017ல் ரூ.24.06 கோடிக்கு AMRUT 2016-17 திட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | 2018–19ம் ஆண்டு மொத்த இணைப்புகள் | 32,801 |
| 2 | கேட்பு | ரூ. 11.86 கோடி |
| 3 | வசூல் 51% | ரூ. 5.82 கோடி |
| 4 | நிலுவை | ரூ. 6.04 கோடி |

**<u>செலவீனம்</u>**

| | | |
|---|---|---|
| 1 | வருடாந்திர பராமரிப்பு | ரூ.1.20 கோடி |
| 2 | சுத்திகரிப்பு வகைக்கு (CMWSSB) வருடத்திற்கு | ரூ.2.40 கோடி |
| 3 | மோட்டார், பாதாள சாக்கடை குழாய் பராமரிப்பு | ரூ.0.70 கோடி |
| 4 | மின் கட்டணம் வருடத்திற்கு | ரூ.1.00 கோடி |
| | **மொத்தம்** | **ரூ.5.30 கோடி** |

**<u>வேங்கடமங்கலத்தில் உள்ள பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளுக்கு உட்பபட்ட ஒருங்கிணைந்த நகராட்சி திடக்கழிவு மேலாண்மை அமைப்பு குறித்த விவரம்</u>**

பல்லாவரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளுக்கான ஒருங்கிணைந்த நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம் பொது மற்றும் தனியார் கூட்டு அடிப்படையில் திருவாளர் எஸ்எல் பல்லவபுரம் தாம்பரம் திருவாளர் டபிள்யு பிரைவேட் லிமிலெட் (தற்போது பல்லாவரம் தாம்பரம் திருவாளர் டபில்யூ பிரைவேட் லிமிடெட்) அவர்களுக்கு 18.01.2013 அன்று கருத்திட்ட உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு பின்வரும் கூறகளை ரூ.99.00 கோடி மதிப்பீட்டில் செய்து முடித்திட ஒப்பந்தம் செய்யப்பட்டது.

**கட்டம் – 1**

- திடக்கழிவு இடமாற்று நிலையம் – 2 (பல்லவபுரம் – கணபதிபுரம், தாம்பரம் – கன்னடபாளையம்)
- கொள்கலன்கள் (14) மற்றும் வாகனங்கள் (8) – ரூ.54.75 கோடி.
- பாலி கார்போனேட்டால் மூடப்பட்ட உறையுடன் கூடிய உரக்கலத்திடல் இயந்திரங்கள் மற்றும் எடை மேடை.
- அறிவியல் சார்ந்த நிலநிரப்பு.
- கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் தயாரிக்கும் கூடம்.

**கட்டம் – 2**

- திடக்கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் மூலம் எரிசக்தி உற்பத்தி ரூ.44.25 கோடி.
- தற்போதுள்ள குப்பை கிடங்குள் விஞ்ஞான முறையில் மூடுதல்.

நில குத்தகை உடன்படிக்கை 25.04.2013 அன்று நிறைவேற்றப்பட்டு, தமிழக மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து திடக்கழிவு இடமாற்று நிலையம் மற்றும் செயலாக்க ஆலைகளை செயல்படுத்துவதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து

இத்திட்டத்தினை செயல்படுத்தி கண்காணிக்கும் திட்ட மேலாண்மை ஆலோசனை குழு இன்ஃப்ராஇன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு பல்லவபுரம் நகராட்சியால் வழங்கப்பட்டது.

கட்டம்–1ம் பணிகள் முற்றிலுமாக நிறைவடைந்து திடக்கழிவிலிருந்து பெறப்படும் எரிபொருள் தயாரிப்பு வரை வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கட்டம் – 1யை 01.07.2015 அன்று அதிகாரப்பூர்வ செயல்பாட்டு திட்டமாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டின் அப்போதைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களால் 28.12.2015 அன்று காணொளி காட்சி மூலம் துவக்கம் செய்யப்பட்டது.

பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளில் இருந்து தினசரி திடக்கழிவுகள் பெறப்பட்டு செயலாக்கும் ஆலைக்கு எடுத்து சென்று எரிபொருள் மற்றும் உரமாக மாற்றப்பட்டு வருகிறது. இந்த கழிவில் இருந்து பெறப்பட்ட எரிபொருள் சிமெண்ட் உற்பத்தி ஆலையில் மாற்று எரிபொருளாகவும் மற்றும் உரம் இயற்கை உரம்/ரசாயனத் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இச்செயல் திட்டம் முறையே நடைபெறுவதற்காக ஒப்பந்தத்தின்படி அதிகாரப்பூர்வ செயல்பாட்டு திட்டமாக அறிவிக்கப்பட்ட நாள் முதல் மாத இயக்க கட்டணம் நகராட்சிகளால் வழங்கப்படுகிறது.

பல்லவபுரம், தாம்பரம், அனகாபுத்தூர், பம்மல், செம்பாக்கம் ஆகிய நகராட்சிகளில் பெறப்படும் குப்பைகள் வேங்கடமங்கலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நாள் ஒன்றுக்கு 300 டன் அளவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கட்டம் –2ம் பணிகளில் ஒன்றான எரியூட்டப்படாத முறையில் மின்சக்தி தயாரித்தல் முறை பூனே போன்ற பிற நகரங்களில் வெற்றிகரமான இயக்கம் பெறாததால் இதற்கு தகுந்த முறையான எரியூட்டப்பட்ட முறையில் மின்சக்தி தயாரிக்கும் திட்டம், ஒப்புதல் வழங்கப்பெற்று திடக்கழிவு மேலாண்மை விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் (2015) பின்பற்றும் செயல் திட்டமாக இன்னும் சில மாதங்களில் தொடங்கி ஏப்ரல் 2019 ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டு சம்மந்தப்பட்ட நிறுவனம் தொடர்ச்சியாக மின்சாரம் தயாரிக்கும்பணி மேற்கொள்ள இயலவில்லை. பல அறிவிப்பு கடிதங்கள் வழங்கியும் பணி மேற்கொள்ளாததால் 20.02.2019ம் தேதி Essel நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. வேங்கடமங்கலம் திட்டத்தை தற்போது நகராட்சியே பராமரித்து வருகிறது.

கட்டம் – 2ம் பணிகளில் மற்றொன்றான பல்லவபுரம் மற்றும் தாம்பரம் நகராட்சிகளில் உள்ள குப்பை தேக்கக் கிடங்குகளை விஞ்ஞான ரீதியிலான மூடும் செயல் திட்டத்திற்கு (Scientific Capping) மாற்றாக பசுமை தீர்ப்பாயம் நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல் மற்றும் வழி நடத்துதலினால் நிலப்பகுதியை மறு சீரமைப்பு மற்றும் மீட்டுதல் பணிக்காக உயிரியல் அகழாய்வு முறை (Bio-mining) மூலம் நிறைவேற்றுவதற்கு ரூ.9.56 கோடிக்கு 12.08.2020

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. முற்றும் இவ் உரக்கிடங்கில் inciderter அமைக்க அரசு அனுமதி வேண்டி மதிப்பீடு ரூ. 9.53 கோடிக்கு நயன் செய்யப்பட்டு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொரோனா நோய் பரவல் காரணமாக தளஆய்வு பணிகள் / பிரேரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டு ஜுலை 2020ல் மீண்டும் துவங்கப்பட்டுள்ளது.

## தற்போதைய குடிநீர் விவரம் மற்றும் கோடை காலத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கை விவரம்.

## தற்போதைய நிலை—

பல்லவபுரம் நகராட்சி 18.00 ச.கி.மீ. பரப்பளவில் 42 வார்டுகளை உள்ளடக்கியதாகும். மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 215452 ஆகவும், தற்போதைய மக்கள் தொகை சராசரியாக 3,00,000 ஆக உள்ளது. இந்நகர் பகுதியில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நாள் ஒன்றுக்கு தேவைப்படும் குடிநீர் அளவு 29.09 MLD ஆகும்.

திட்ட வடிவமைப்பின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நாள் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய 54.00 இலட்சம் லிட்டர் குடிநீரில் நாள் ஒன்றுக்கு 50.00 இலட்சம் லிட்டர் அளவிலும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் மூலம் தினசரி 25 இலட்சம் லிட்டர் வழங்கப்பட வேண்டியதில், 10 இலட்சம் லிட்டர் அளவில் பெறப்பட்டு, உள்ளூர் நீராதாரங்களான கைப்பம்புகள், மினி பவர் பம்ப் மற்றும் கிணறுகள் மூல 70.00 இலட்சம் லிட்டர் என மொத்தம் 130.00 இலட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்கப் பெற்று நபர் ஒருவருக்கு 4 நாட்களுக்கு ஒருமுறை 60.00 லிட்டர் அளவில் தற்போதைய நிலவரப்படி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## கோடைக் காலத்தை எதிர்கொள்ளும் திட்டம்

## அ) குடிநீர் அபிவிருத்தி பணிகள்—

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் மூலம் சீராக குடிநீர் விநியோகம் வழங்க இயலாத நிலையில் கூடுதல் ஆதாரம் தோற்றுவிக்க ஏதுவாக பாலாற்றின் மேலச்சேரி ஆற்றுப் படுக்கையில் கூடுதலாக ஆழ்துளை கிணறுகள் மற்றும் பைப் லைன்கள் அமைக்க ரூ.521.40 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன மான்ய நிதி 2019—20ம் ஆண்டின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு தற்போது பணிகள் முடிவடைந்த நிலையில் திட்ட பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## ஆ) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் –

நகராட்சி பகுதியினை ஒட்டி அமைந்துள்ள திரிசூலம் மற்றும் மூவரசம்பட்டு கல்குவாரிகளில் இருந்து குடிநீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாக தீர்க்க தினசரி 500 MLD தண்ணீர் சுத்திகரிப்பு செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12.50 கோடிக்கு புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் அரசாணை (நிலை) எண். 08, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள். 20.01.2020ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவுறும் பட்சத்தில் நகராட்சிக்கு கூடுதலாக 5 MLD குடிநீர் கிடைக்கப்பெறும்.

## இ) புதிய குடிநீர் திட்டம் (CMWSSB)-

செம்பரம்பாக்கம் ஏரி குடிநீர் ஆதாரத்தை கொண்டு பல்லவபுரம் பெரு நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் தமிழ்நாடு நகர்புற அடிப்படை நிதி சேவை லிமிடெட் 111ன் கீழ் ரூ. 130.00 கோடியில் பணிகள் நடைபெற்று வருகிறது. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் மூலம் இத்திட்டத்தில் 7 எண்ணம் உயர் மட்ட நீர் தேக்கத் தொட்டிகளும், 3 எண்ணம் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. ஜூலை 2020ல் இத்திட்டம் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி நபர் ஒருவருக்கு 135 LPCD அளவில் தினசரி குடிநீர் வழங்க இயலும்.

## பொது சுகாதாரம்

இந்நகராட்சி எல்லைக்குள் அரசினர் மருத்துவமனை ஒன்றும், தனியார் மருத்துவ கல்லூரி மருத்துவமனை ஒன்றும் மற்றும் தனியார் மருத்துவமனை மற்றும் மருத்துவ கலந்தாய்வு மையம் என 23 எண்ணிக்கைகளும் இயங்கி வருகின்றன. நகராட்சியில் நகர சுகாதார மையங்கள் 4 எண்ணிக்கைகள் தேசிய சுகாதார இயக்கம் (National Health Mission) நலப் பணிகள் துறை இயக்குநர்கள் அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | காலரா | இல்லை |
| 2. | பெரியம்மை | இல்லை |
| 3. | பிளேக் | இல்லை |
| 4. | மூச்சுப்பிடிப்பு | இல்லை |
| 5. | சீதபேதி | இல்லை |
| 6. | இன்புளுயன்சா | இல்லை |
| 7. | வெறி நாய்க்கடி | இல்லை |
| 8. | இதர வியாதிகள் | இல்லை |

அறிக்கையாண்டில் நகரில் சுற்றித்திரிந்த 1071 நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து தடுப்பூசி போடப்பட்டு அதே இடத்தில் திரும்ப விடப்பட்டது.

அறிக்கையாண்டில் நகராட்சி எல்லைக்குள் தொற்று நோய்கள் எதுவும் பரவவில்லை. இருப்பினும் எல்லைக்குள் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்ட மலேரியா ஒழிப்பு திட்டம் திருப்திகரமாக செயல்பட்டது. மலேரியா மரணம் ஏதும் இல்லை. மேற்கண்ட திட்டம் கீழ்க்கண்ட அனுமதிக்கப்பட்ட அலுவலர்களை கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | துப்புரவு ஆய்வாளர் | 1 |
| 2. | களப்பணியாளர் | 2 |
| 3. | மருந்து தெளிப்பவர் | 10 |

தேசிய யானைக்கால் நோய் தடுப்பு திட்டத்தின்படி மட்டும் 22 வார்டுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியின் பராமரிப்பில் 20 வார்டுகள் உள்ளது.

## உணவு கலப்படம்

05.11.2011 முதல் உணவு கலப்பட தடைச் சட்டத்திற்கு பதிலாக உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம்–2006ன்படி உணவு பாதுகாப்புத் துறையின் நியமன அலுவலர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்

இந்த ஆண்டில் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான மனுக்கள் 1812 பெறப்பட்டு சுகாதார ஆய்வாளர், ஆணையாளர் நேரில் பார்வையிட்ட பின் உரிமையாணைகள் வழங்கப்பட்டது. நகர மன்றத் தீர்மானம் எண் 895, நாள் 29.10.2014ன்படி உரிமையாணைக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.81,40,615/– நகராட்சிக்கு வருமானம் கிடைத்துள்ளது.

அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் கட்டணம் – ரூ.81,40,615/–

2019–20 அறிக்கையாண்டில் 1589 பிறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1453 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## 5–வது மக்கள் தொகை திட்டம்

5–வது இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் தமிழக அரசு ஆணை எம்.எஸ். எண் 136, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள் 31.01.2001–ன்படியும் அரசு கடிதம் எண் 40918/ஈஏபி1/2001–2002/எச்1, நாள் 23.08.2001–ன் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் 28.09.2001 தேதியிட்ட ந.க. எண் 33141/99/எச்3, எண்ணுள்ள கடிதம் மற்றும் பணியாளர்கள் தொகுதி விவர இணைப்பு பட்டியல் படியும் இரு நகர நல வாழ்வு நிலையங்கள் மற்றும் மகப்பேறு வார்டுடன் கூடிய குடும்ப நல (பெண்) அறுவை அரங்கம் ஆகியவை 01.04.2001 தேதி முதல் இரண்டு பங்கும் நகராட்சி ஒரு பங்குமாக 2–1 விகிதப்படி மான்ய தொகை வழங்குகின்ற அடிப்படையில் பராமரித்து வர அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆண்டிற்கு மொத்த செலவினம் ரூ.50.00 இலட்சங்கள் தேவைப்படுகின்றன.

## குடும்ப நல திட்டம்

2019–2020–ம் ஆண்டிற்கு மாவட்ட ஆட்சியர் இந்நகராட்சியின் அறுவை அரங்கத்திற்கு (Operation Theatre) இலக்கு 140 நிர்ணயிக்கப்பட்டு 50 எண்ணிக்கை முடிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | உதவியாளர் | 1 |
| 2. | நகர நல செவிலியர் | 7 |
| 3. | பெண் உதவியாளர் | 3 |
| 4. | செவிலியர் | 1 |
| 5. | தியேட்டர் உதவியாளர் | 1 |
| 6. | வார்டு அட்டெண்டர் | 1 |

ஆகியோர் பணிபுரிகிறார்கள். இச்சுகாதார நிலையங்களின் கீழ் ஜனனி சுரக்ஷா யோஜனா மனுக்கள் 87 (2018–19) எண்கள் பெறப்பட்டது. கர்ப்பிணிகளுக்கு ரூ.600/– வீதம் வழங்கப்பட்டது. மீதம் இல்லை.

## கர்ப்பிணி தாய்மார்கள் பராமரித்தல்

1. பேறுக்கால பணிகள்
2. குழந்தைகள் நலம்
3. தடுப்பு ஊசித் திட்டம்
4. குடும்ப நலத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகிறது.
5. அரசினால் அறிவிக்கப்படுகின்ற நலத்திட்டம்

## குடும்ப நலத்திட்ட சாதனை விவரம் 2019–20

| | ஐ.பி.பி. இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| குடும்ப நல அறுவை சிகிச்சை | 820 | 799 | 97 % |
| காப்பர் – டி | 900 | 866 | 96 % |
| கருத்தடை மாத்திரை | 380 | 354 | 93 % |
| ஆணுறைகள் | 450 | 355 | 78 % |

## தடுப்பூசி திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு பணிகள் செய்யப்பட்டன.

| | ஐ.பி.பி. இலக்கு | சாதனை | சதவீதம் |
|---|---|---|---|
| பென்டா வேலன்ட் | 2900 | 2813 | 97 % |
| போலியோ | 2900 | 2813 | 97 % |
| பி.சி.சி | 2900 | 2813 | 97 % |
| தட்டம்மை | 2900 | 2813 | 97 % |
| டீ.டீ. தாய்மார்கள் | 3151 | 3056 | 97 % |
| இரும்பு சத்து மாத்திரைகள் (பெரியது) | 3151 | 3056 | 97 % |
| வைட்டமின் –ஏ– திரவம் | 20467 | 18829 | 92 % |
| நோய் தடுப்பூசி (டி.டி) | 3281 | 3149 | 96 % |
| டி.டி. 10 வருடம் | 4260 | 4130 | 92 % |
| டி.டி. 16 வருடம் | 4146 | 3942 | 95 % |

## போக்குவரத்து

இந்நகராட்சியில் பேருந்து நிலையம் பராமரிக்கப்படவில்லை. போக்குவரத்து பணிகள் தமிழக அரசு போக்குவரத்து கழகத்தாலும் தனியார் ஏஜென்சியாலும் நடத்தப்படுகின்றன.

## அங்காடி

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குரோம்பேட்டை ஸ்டேஷன் ரோட்டில் 54 கடைகள் (குளம் போட்டது) குத்தகை விடப்பட்டுள்ளது. மேலும் மூன்று இரும்பு பங்குகள் மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.
2. ஒர்க்ஸ் ரோட்டில் 5 இரும்பு பங்குகள் மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

3. பல்லாவரம் ஜி.எஸ்.டி ரோட்டில் 19 கடைகள் புதிதாக கட்டப்பட்டு குத்தகை விடப்பட்டுள்ளது.
4. பல்லாவரம் ஸ்டேஷன் ரோட்டில் 30 கடைகள் மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.
5. கீழ்க்கட்டளை பேருந்து நிலைய வளாகத்தில் தரைத்தளத்தில் 43 கடைகள் கட்டப்பட்டு 42 கடைகள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. ஒரு கடை நகராட்சி வரி வசூல் கணினி மையமாக செயல்பட்டு வருகிறது. முதல் தளத்தில் 2 அலுவலகம் / ரெஸ்டாரெண்ட் கட்டிடம் கட்டப்பட்டு அறிக்கை ஆண்டில் ஏலம் போகவில்லை. தொடர்ந்து ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
6. கீழ்கட்டளை பெரிய தெருவில் புதியதாக 9 கடைகள் கட்டப்பட்டுள்ளது.

## வண்டிகள் நிற்கும் இடம்

நகராட்சியால் வண்டிகள் நிறுத்துமிடம் பராமரிக்கப்படவில்லை.

## பேருந்து நிலையம்

பேருந்து நிலையம் ஏதும் நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. இருப்பினும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இரண்டு பேருந்துகள் முடிவடையும் டெர்மினல் உள்ளது. ஒன்று கீழ்க்கட்டளையிலும் மற்றொன்று அஸ்தினாபுரத்திலும் உள்ளது. பயணிகள் தங்கும் ஆறு நிழற்குடைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவைகள் உள்ள இடங்கள் (1) கீழ்க்கட்டளை (2) பழைய பல்லாவரம் (3) மலங்கானந்தபுரம் (4) குரோம்பேட்டை (5) குரோம்பேட்டை இரயில்வே ஸ்டேஷன் (6) எம்.ஐ.டி கேட், குரோம்பேட்டை.

## தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள்

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்கள் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்பட்டது.

## மரம் நடும் திட்டம் மற்றும் பூங்காக்கள்

மரம் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதற்கான எந்தவித நிதியுதவியும் வழங்கப்படவில்லை. நிதியாண்டுகளில் மரம் நடுதல் திட்டம் பற்றி விளக்கப்பட்டு ஒத்துழைப்புடன் மேற்படி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது.

இந்நகராட்சியில் உள்ள ஏழு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் நகராட்சி பணியாளர்களை கொண்டு மரங்கள் நடப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## சொத்துவரி பொது சீராய்வு

அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.11.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.20.11.2019ன் படியும், இந் நகர்மன்ற தீர்மானம் எண்.298 நாள்.21.11.2019ன் படியும் சொத்துவரி பொது சீராய்வு (Revision of Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்துவரி உயர்வினையும்ம் சொத்துவரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rate's) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும், மற்றும் 01.10.2017ம் தேதி முதல் சொத்துவரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும், நிறுத்தி வைக்கப்பட்ட 01.10.2017ம் தேதிய சொத்து வரியே தொடர்ந்து வசூல் செய்யப்பட்டு வருகிறது.

## பொது வருவாய்

சொத்துவரி காலிமனை வரி 01.04.2011 முதல் தொடர்ந்து கீழ்க்கண்டவாறு வசூலிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பொது காரியங்களுக்கு (அரையாண்டிற்கு) | 2% |
| 2. | தண்ணீர் மற்றும் சாக்கடை | 3% |
| 3. | விளக்கு | 2% |
| 4. | மலம் சுத்தம் செய்தல் | 2% |
| 5. | கல்வி | 2 1/2 % |
| 6. | நூலக வரி (பொது காரியங்களுக்கு) | 10% |

இந்நகராட்சியின் அறிக்கை ஆண்டில் சொத்துவரி விதிப்புகளின் எண்ணிக்கை 56009 ஆகும். நடப்பு கேட்பு ரூ.1917.22 இலட்சம்.

## காலிமனை வரி

காலி மனைகள் மீதான சொத்துவரி மூலதன மதிப்பின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது அரசாணை எண் 151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.08.2009—ன்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை—5 அவர்களின் சுற்றறிக்கை எண் 41802/19.03.2010—ன்படியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 81 (3)—ன்படி சதுர அடி மதிப்பீட்டில் வரி விதிக்கப்படுகிறது.

1. பொது காரியங்களுக்கு (அரையாண்டிற்கு) 1/4 %
2. தண்ணீர் மற்றும் சாக்கடை 1/4 %
3. விளக்கு 1/16 %
4. மலம் சுத்தம் செய்தல் 1/16 %
5. கல்வி 1/4 %
6. நூலக வரி (பொது காரியங்களுக்கு) 10%
7. வண்டி வாகனம் வரி வருமானம் இல்லை

## பொது வருமானங்கள்

1. சொத்துவரி ரூ. 1878.10 இலட்சம்
2. தொழில்வரி ரூ. 273.70 இலட்சம்
3. வண்டி வாகனத்தின் வரி ---

## வரியில்லா இனங்கள்

1. அபாயகரமானதும், அருவருக்கதக்கதுமான தொழில் கட்டணம் ரூ. 72,96,265/-
2. கட்டிட உரிமக் கட்டணம் ரூ. 3,93,830/-
3. ஆடு அடிக்கும் தொட்டி ரூ. 1,03,704/-
4. இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ரூ. 72,358/-

## வருவாய் பிரிவு

ஒரு வருவாய் அலுவலர், இரண்டு வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் ஒன்பது வருவாய் உதவியாளர்களை கொண்டு வரியினங்கள் வசூலிக்கப்பட்டன. மேற்படி ஊழியர்களுக்கு இவ்வாண்டில் ரூ. 61,05,110/- ஊதியமாக செலவிடப்பட்டது.

1. சொத்துவரி ஒரு நபருக்கு – ரூ. 395.00
2. தொழில்வரி ஒரு நபருக்கு – ரூ. 35.00

## வரிவிதிப்புகள் விவரம்

| வ. எண் | கட்டிடங்களின் விவரம் | வரிவிதிப்பு |
|---|---|---|
| 1) | குடியிருப்பு | 52562 |
| 2) | வணிக பயன்பாடு | 3270 |
| 3) | தொழிற்சாலைகள் பயன்பாடு | 132 |
| 4) | கல்வி பயன்பாடு | 44 |
| 5) | அரசு கட்டிடம் | |
| | மொத்தம் | 56009 |

## தீனதயாள் அந்தோதயா யோஜனா தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

## DEENADAYAL ANTYODAYA YOJANA – NATIONAL URBAN LIVELIHOODS MISSION – (DAY NULM)

பல்லவபுரம் நகராட்சியில் தீனதயாள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நான்கு சமுதாய அமைப்பாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தீனதயாள் அந்தோதயா யோஜனா தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம் 2019–2020 ஆண்டிற்கு வரப்பெற்ற மான்யத்தொகையை கீழ்கண்ட தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | தலைப்பு | வரப்பெற்ற மான்யத் தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை | விவரம் |
|---|---|---|---|---|
| 1 | அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் (Amma Two Vehicle) | ரூ.32,75,000 | 131 | அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின்கீழ் 107 பயனாளிகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. அதில் 78 பயனாளிகள் இருசக்கர வாகனம் வாங்கி அதற்குண்டான மான்யம் ரூ.25,000/– வீதம் ரூ.19,50,000/– தொகை மானியமாக வழங்கப்பட்டது. |
| 2. | மகளிர் சுய உதவிக் குழுக்கள் | | 129 குழுக்கள் | பல்லவபுரம் நகராட்சியில் 129 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளின் மூலம் கடன் வாங்கி தரப்பட்டது. வங்கிகளின் மூலம் கடன் வாங்கியத் தொகை ரூ.5,28,50,000/– இதன் மூலம் 1548 பயனாளிகள் பலன் அடைந்துள்ளனர். |

### தணிக்கை

இந் நகராட்சியின் கணக்குகள் மீதான தணிக்கை 2019–2020ம் ஆண்டு வரை முடிவு பெற்றுள்ளது. நிலுவையில் உள்ள மொத்த தணிக்கை தடைகள் 420 ஆகும். தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பொது

நகராட்சி தோற்றுவிக்கப்பட்ட பிறகு நகராட்சி வருவாயை பெருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் இந்நகராட்சி தனது வருவாயை பெருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய கவனம் செலுத்தப்பட்டது.

பல்வேறு நல திட்டப் பணிகளை இந்நகராட்சிக்கு அனுமதித்ததற்காக தமிழக அரசுக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கும் மற்றும் இதர அரசுத் துறையினருக்கும் எனது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி.

# பல்லவபுரம் பெரு நகராட்சி

**குரோம்பேட்டை, சென்னை – 600 044**



# நிர்வாக அறிக்கை

# 2019–2020